**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.T.C.883/2026**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.பிரேம்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.கணேசன்** | **Calling** | : | **தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **35** |
| | | | **Dated** | : | **01.08.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

நான் தற்போது திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநராக பணி செய்கிறேன். திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் அஞ்சல் A.வெள்ளோடு கிராமம், S.R.நகர், மதுரை ரோடு, க.எண்.10/5C என்ற முகவரியில் இயங்கி வரும் AR Diary Food Private Limited என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது. மேற்படி தொழிற்சாலையில் கடந்த 25.04.2023 அன்று பிற்பகல் 7.30 மணியளவில் திரு.T.சேவியர் என்ற தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்துக்குள்ளான தொழிலாளி விபத்து நடந்த 48 மணி நேரத்திற்குள் வேலைக்கு வர இயலாவிட்டால், அடுத்த 24 மணி நேரத்திற்குள் படிவம் எண். 18ன்

மூலமாக தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (4) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் 25.04.2023 அன்று முற்பகல் 7.30 மணியளவில் திரு.சேவியர் என்ற தொழிலாளிக்கும் மற்றும் 29.05.2023 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு திரு.A.ஜானி என்ற தொழிலாளிக்கும் விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி தொழிற்சாலையில் விபத்துக்குள்ளான தொழிலாளிகள் விபத்து ஏற்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்குள் பணிக்கு திரும்பாவிட்டால், 28 நாட்களுக்குள் படிவம் எண். 18B–ன்படி தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (6) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் திரு.A.ஜானி என்ற தொழிலாளி இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கும் போது Sealing Jaw–ல் சிக்கிய பிளாஸ்டிக் கவர் Roll–ஐ சரிசெய்யும் போது சூடாக இருந்த Sealing Jaw–ல் இடதுகை பட்டு விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது இடதுகையின் ஆள்காட்டி விரலின் நுனிப்பகுதியில் நிரந்திர ஊனம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 41 உடன் விதி 61 F– ன் கீழ் கடுமையான முரணாகும்.

மேலும், மேற்படி தொழிற்சாலையில் திரு.A.ஜானி என்ற தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து பற்றிய தகவலை விபத்து நடந்த 12 மணி நேரத்திற்குள் படிவம் எண். 18ன் மூலமாக தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநருக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி தகவலை தெரிவிக்காதது தொழிற்சாலை சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் பிரிவு 88(1)(3) விதி 96 (1)(2) – ன் கீழ் கடுமையான முரணாகும்.

ஆய்வறிக்கை படிவம் **அ.சா.ஆ. 1,** காரணம் கோரும் அறிவிப்பு **அ.சா.ஆ. 2,** அஞ்சலக ஒப்புதல் அட்டை **அ.சா.ஆ.3,** மேலாளரின் பதில் கடிதம் **அ.சா.ஆ.4,** திருத்தச்சீட்டு **அ.சா.ஆ.5,** வாக்குமூலங்கள் **அ.சா.ஆ. 6,** E.S.I Form – 12 **அ.சா.ஆ.7**, மேல்நடவடிக்கை தொடர்தல் குறித்த கடிதம் **அ.சா.ஆ.8**, வழக்கு அனுமதி ஆணை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>** **இல்லை.**

Taken down by me/before me in open court on 01.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.08.01 19:29:38 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**